அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்
International Institute of Tamil Arts

• Gewerbestrasse 4 • 8162 Steinmaur
• Tel. 044 440 20 58 • Fax 044 440 20 59
• iita@hotmail.ch • ® CH-020.6.001.634-6

# அனைத்துலகத் தமிழ்க்கலைத் தேர்வு – 2026

**தமிழ்ச்சோலை நிர்வாகிகள், தமிழ்க்கலை ஆசிரியர்களிற்கு அன்புடன் வணக்கம்.**

**2019ம் ஆண்டு வெளியிடப்பட்ட புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில்** நடைபெறவுள்ள 2026ம் ஆண்டுத் தேர்விற்கான விண்ணப்பப் படிவங்களும், தேர்வு விதிமுறைகளும் இணைக்கப்பட்டுள்ளன. முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் "மாணவர் விண்ணப்ப விபரம்" என்ற படிவத்தினையும் முழுமைப்படுத்தி தேர்வுக்கட்டணத்துடன் **21.06.2026** ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவக நாடுகள்நிலைப் பிரதிநிதிகளிடம் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் பிந்திய விண்ணப்பமாகவே கருதப்படும்.**

**தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் தேர்விற்குத் தோற்றாவிடின் (மருத்துவச்சான்றிதழ் உட்பட) விண்ணப்பக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.**

மாணவர்களால் தனித்து அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தரம் இரண்டிற்குமேல் தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவர் அறிமுறைத் தேர்விற்குத் தோற்றவில்லையெனின் அம்மாணவர் செய்முறைத் தேர்வில் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

தேர்வு விதிமுறைகளை மாணவர்கள் தெளிவாக அறிந்துகொள்வதற்கு இலகுவாக தேர்விற்குத் தோற்றும் அனைத்து மாணவர்களிற்கும் விண்ணப்பப்படிவத்துடன் விதிமுறையினையும் இணைத்து வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். விண்ணப்பப்படிவங்களும், விதிமுறைகளும் மேலதிகமாகத் தேவைப்படின் பிரதிசெய்து வழங்கவும்.

## அறிமுறை அல்லது செய்முறைத் தேர்விற்கான மீள்தேர்வு:

**கடந்த வருடம் தரம் இரண்டு தொடக்கம் ஆற்றுகைத் தரம் வரை அறிமுறை, செய்முறைத் தேர்வுகளிற்குத் தோற்றி அறிமுறை அல்லது செய்முறைத் தேர்வில் ஏதாவது ஒரு பாடத்தில் சித்தியடையாத மாணவர்கள் மட்டும் விரும்பின் சித்தயடையாத பாடத்திற்கு மட்டும் தோற்ற** அனுமதிக்கப்படுவார்கள். இவர்கள் தேர்வுக் கட்டணத்தினை முழுமையாகச் செலுத்துதல் வேண்டும்.

## தேர்வுக்கட்டணம் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது:

**2018ம் ஆண்டில் இருந்து நடைமுறையில் இருந்த தேர்வுக்கட்டணம் அதிகரிக்கப்பட்டு வரும் தேர்வுக்கான செலவுகள் காரணமாக ஒவ்வொரு மாணவருக்குமான தேர்வுக் கட்டணம் இவ்வருடத்தில் இருந்து 10 யூரோவினால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்பதனையும் தங்கள் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.**

**பிரான்ஸ் தொடர்புகளுக்கு:**
திரு. காணிக்கைநாதன் யோநாதன்
தமிழ்ச்சோலை தலைமைப் பணியகம்
பிரான்ஸ்
0616 975 423

நன்றி

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:**
**அனைத்துலகத் தமிழ்க்கலைத் தேர்வு 2026**
**Tamoulcholai Association**
**165bd le la Villette**
**75010 Paris.**

இவ்வண்ணம்

நாகராஜா விஜயகுமார்
தேர்வுப் பொறுப்பாளர்
அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்.

சூரிச், 27.04.2026